

மத்திய சென்னை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தயாநிதி மாறன் எம்பி, அண்ணாநகர் தெற்கு பகுதி மற்றும் அண்ணா நகர் வடக்கு பகுதி பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு, எம்.கே மோகன் எம்எல்ஏ, அண்ணாநகர் பகுதி செயலாளர்கள் ச.பரமசிவம், நா.ராமலிங்கம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஏ.டி.முருகன், ராணி ரவிச்சந்திரன், சங்கீதா மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.





சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 49(அ) வட்டத்தின் சார்பில் வட்ட செயலாளர் காட்டன் ஜி.சதீஷ்குமார் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழா பொதுக்கூட்டம் மற்றும் நலஉதவிகள் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார்.சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ந.மனோகரன், வே.சிவகுமார், வட்ட செயலாளர்கள் எல்.சீனிவாசன், க.கோவிந்தராஜ், என்.கிருஷ்ணன், பி.கண்ணன், ஆர்.வி.கணேஷ், பகுதி நிர்வாகிகள் த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் பெருந்தன்மையான கோரிக்கையை ஏற்று - வெளியேற்றப்பட்ட

# அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு அனுமதி!

சென்னை, ஜூலை 22 -

சட்டப்பேரவையில் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து முதலமைச்சர் பெருந்தன்மையுடன் விடுத்த கோரிக்கையை ஏற்று அவர்கள் அனை வரும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க பேரவைத் தலைவர் மு.அப்பாவு அனுமதி வழங்கினார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது கள்ளக்குறிச்சி விவகாரத்தை எழுப்பி அ.தி.மு.க உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். கேள்வி நேரத்திற்கு பின்னர் கவன ஈர்ப்பு தீர்மானம் மீது விவாதம் நடத்த அனுமதி அளிக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்த பின்னரும், அ.தி.மு.க.வினர் அதனை ஏற்காமல் அவையில் அமைதிக்கு குந்தகம் விளை விக்கும் வகையில் நடந்துகொண்டனர்.

இதையடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் பேரவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவையின் மாண்புக்கு எதிராக அ.தி.மு.க. உறுப்பினர்கள் செயல் பட்டதால் அவர்கள் வெளியேற்றப்பட்டதாக பேரவைத்



தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கள்ளக் குறிச்சி விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க தான் உத்தரவிட்டு இருப்பதாக தெரிவித்தார். அ.தி.மு.க.வினர் திட்டமிட்டு நாடகத்தை அரங்கேற்றி உள்ளதாகவும், விதி களுக்கு, மரபுகளுக்கு மாறாக அ.தி.மு.கவினர் நடந்து கொண்டுள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார்.

ஜனநாயக முறையில் சட்டமன்றம் நடைபெற வேண்டும் என்பதில் தான் உறுதியாக உள்ளதாக கூறிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பிரதான எதிர்க்கட்சியினர் பங்கேற்கும் வகையில் அவர்கள் மீதான நடவடிக்கையை ரத்து செய்து அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று வெளியேற்றப்பட்ட அ.தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதி அளித்து பேரவைத் தலைவர் அப்பாவு உத்தரவிட்டார். பெருந்தன்மையோடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அ.தி.மு.கவினரை அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்ததை பேரவைத் தலைவர் அப்பாவு ஏற்றுக்கொண்ட நிலையில், முதலமைச்சரின் பெருந்தன்மையை அ.தி.மு.கவினர் புரிந்து கொள்ளாமல் அவை நடவடிக்கைகளில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர்.

### சேப்பாக்கம் - ஆயிரம் விளக்குப் பகுதிகளில்

# தயாநிதி மாறன் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## நே.சிற்றரசு - நிர்வாகிகள் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 22

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவருமான நே.சிற்றரசு ஆகியோர் சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் மற்றும் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிகளில் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

அதன் விவரம் பின்வருமாறு:-

**சேப்பாக்கம் பகுதி**

22.06.2024 - சனிக்கிழமை - மாலை 4.00 மணியளவில்

**62வது வட்டம்**

தொடங்கும் இடம்: அய்யா முதலி தெரு, பஜார் தெரு, ரெக்ஸ் தெரு. பாலகிருஷ்ணன் தெரு. வேதகிரி தெரு, கலவை தெரு. மார்கபதி தெரு, அக்ரஹாரம் தெரு, ஐய்யா தெரு. பழனி ஆண்டவர் தெரு. சிங்கண்ணத் தெரு.

**62 (அ) வட்டம்**

கிங்கன்ன தெரு, குருவப்பா தெரு, கிருஷ்ணப்ப தெரு, ராஜகோபால் தெரு. குருவப்பா தெரு. சாமி நாயக்கன் தெரு. அருணாச்சல தெரு, கலவை தெரு. நாகமணி தெரு, நைனியப்பன் தெரு, ஐய்யா தெரு, கங்குவார் தெரு, சிங்கண்ண தெரு.

**63வது வட்டம்**

கரீம் மொய்தீன் தெரு. ஆதித்தனார் சாலை, காஞ்சிபுரம் பச்சையப்பன் தெரு, நாராயண நாயக்கன் தெரு, வீரபத்திர ஆச்சாரி தெரு, சைபுல் முல்க் தெரு, தெற்கு கூவம் சாலை.

**63 (அ) வட்டம்**

புர்ரா தெரு, மாருல் தெரு, ஜான் முகமது தெரு, குலாப் மொய்தீன் தெரு, நைனியப்பா தெரு, சுப்பராயன் தெரு, கோபால்தாஸ் தெரு, வி.என்.தாஸ் ரோடு, உசேன் முல்க் தெரு, வீரன்புரம், அஸிஸ் மக்கான் தெரு. எம்.எஸ். மஹால்.

**114வது வட்டம்**

பிள்ளையார் கோவில் தெரு, குப்பு முத்து தெரு, எல்லிஸ் ரோடு. அய்யாவு தெரு, நைபூன் அலிகான் தெரு. காண்பாத் தெரு டவர்ஸ், திருவல்லிக்கேணி பிரதான சாலை, அபிபுல்லா தெரு, பக்கிரி சாகிப் தெரு, பைகிராப்ட் ரோடு.

**114 (அ) வட்டம்**

அருணாச்சலம் தெரு, மியான்ஷாகிப் தெரு, வெங்கடேசன் தெரு, ஓ.பி.எம். தெரு, கிருஷ்ணப்பா தெரு, லால்பேகம் தெரு, பெரிய தெரு, பார்த்தசாரதி தெரு, அய்யா தெரு, ரங்கநாதன் தெரு, அக்பர் சாகிப் தெரு, சையோஜி தெரு, டி.எச். ரோடு.

**115வது வட்டம்**

ஜெ.ஜெ.கான் ரோடு, நாயர் அய்யா பிள்ளை தெரு. முகமது உசேன் தெரு, பைக்கிராப்ட் ரோடு, மிர் பக்ஷி அலி தெரு, அய்யா பிள்ளை தெரு, பீட்டர்ஸ் ரோடு, சர்தார் ஜன் கார்மன், மசூதி தெரு, பீட்டர்ஸ் ரோடு, ஆர்.ஓ.பி. 5வது தெரு, ஆர்.ஓ.பி. மெயின் தெரு.

அதனைத் தொடர்ந்து ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதியில் 22.06.2024 - சனிக்கிழமை - மாலை 6.00 மணியளவில்

**111வது வட்டம்**

துவங்கும் இடம் : மாடல் பள்ளி சாலை, சபி முகமது தெரு வழியாக, சுதந்திர நகர். .

**111அ வட்டம் :** கிரீம்ஸ் சாலை, அண்ணா சாலை, புத்தி பேகம் தெரு வழியாக, கான்ட்ரன் ஸ்மித் ரோடு.

**118வது வட்டம்:** சீனிவாச பெருமாள் சன்னதி இரண்டாவது தெரு, பொன்னுசாமி தெரு வழியாக அம்மையப்பன் லேன், புதுப்பேட்டை பி.வி. கோவில் தெரு.

**111அ வட்டம் :** கோபாலபுரம் வழியாக திருவீதியான் தெரு.

**118அ வட்டம் :** முத்தையா தெரு, சொக்கலிங்கம் காலனி வழியாக இளங்கோ சாலை, பிள்ளையார் கோவில் தெரு, நாட்டு முத்து தெரு, அண்ணா சாலை வழியாக.

**117அ வட்டம் :** நக்கீரன் நகர், கிரியப்பா சாலை, ஜி.என்.செட்டி சாலை வழியாக.

**113வது வட்டம் :** கிராம தெரு, ஜோசியர் தெரு, குமரப்பா லேன் வியாசர் தெரு வழியாக கோடம்பாக்கம் நெடுஞ்சாலை.

**113அ வட்டம் :** சீரணிபுரம், தர்மபுரம், சோலையப்பன் தெரு வழியாக

**113ஆ வட்டம் :** இராம காமத்துப்புரம்.

**117அ வட்டம் :** திருமூர்த்தி தெரு வழியாக திருமலை சாலை, விஜயராகவா ரோடு


**117வது வட்டம் :** திரு. வி.க. குடியிருப்பு, தியாகராய ரோடு வழியாக, தாமஸ் சாலை, போக் ரோடு, அமுதம் காலனியில் நிறைவடைகிறது.

மேற்கண்ட நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே. கோவிந்தசாமி**

**ஜூன் 22 (2002)**



கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் ‘சாது’ கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### தி.மு.க. மாணவர் அணி சார்பில்

## சென்னை வள்ளுவர் கோட்டத்தில், ஜீன் 24 அன்று நடைபெறுவதாக இருந்த

# கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!**

நீட் தேர்வே தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதற்காக நிறைவேற்றி அனுப்பியிருக்கும் சட்ட மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் தர வேண்டுமென்றும் - நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப்பெரிய மோசடிகளை, குளறுபடிகளை களைவதற்கு மேல் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க மாணவர் அணிச் சார்பில் வருகிற 24.06.2024 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.06.2024

**சி.வி.எம்.பி. எழிலரசன்**, எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

### மு.க.தமிழரசு முன்னிலை! வினோத் வேலாயுதம் வரவேற்புரை! வரதை த.பரி தலைமை!

# 112 வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - குத்தாலம் அன்பழகன் சிறப்புரை! அன்பகம் கலை - மருத்துவர் நா.எழிலன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 22-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 வது வட்டத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் இன்று (22.6.2024) சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் டிரஸ்ட் புரம் 6 வது தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.

வரதை த.பரி தலைமையில், மு.க.தமிழரசு முன்னிலையில், பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் வரவேற்புரையில், மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி.. கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., தலைமைக் கழகப் பேச்சாளர் குத்தாலம் அன்பழகன் ஆகியோர் சிறப்புரையில், கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, மாநில மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் கலைக் கதிரவன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மாநில மாணவர் அணி துணை செயலாளர் எஸ். மோகன், தலைமை செயற் குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், மாவட்ட அவை தலைவர் த.விக்டர், மாவட்ட நிர்வாகிகள் ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ. சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின் பாபு, பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஜோஸ்டானியல், எம்.டி.ஆர்.நாதன்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா. பிரகாஷ், துபாய் வி.ஆர்.விஜய், மு. சீனிவாசன், திருமலை பொன்னுரங்கம், எம். டி.ஆர்.சாரதி மணிமாறன், ஜி.வி.சரவணன், ச.அசோக் குமார், யோகேஸ்வரி சுந்தரேசன், எலிசபத் அகஸ்டின் பாபு எம்.சி., டி.கே. லதாப்லாரன்ஸ், எஸ்.எம். கே.அண்ணாதுரை, பி.எஸ். ராஜா, டாக்டர் ஜீவகன் அய்யநாதன், எஸ்.எஸ்.அகமதுல்லா, ஏ.விஜயராஜ், இளம்பாரதி, வே. தேவேந்திரன், கோ. ராஜராஜன், சி.கே. ரங்கராஜன், எம்.கே.ஆனந்த், எஸ். அரவிந்த்குமார்,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.ஏ.ஜஸ்டின், ப. கோபால கிருஷ்ணன், என். மோகன வேல், ஜே.இருதயநா தன், க.தங்கமணி, கே.எஸ். கோபி, சி.சியாமளா, எஸ். கே. கமலக்கண்ணன், ஆருண்பிளிக்ஸ், பொ.குப்பு சாமி, டி.ஜி. சுரேந்திரன், கே.எல்.எம்.மணி, வா.தீபா, நா.நாகராஜ், எஸ்.பிரசன்னா, திருமுருகன் இரப்பானாபேகம், பகுதி கழக அவைத் தலைவர் புவி. பாலாஜி,

நிர்வாகிகள் : என்.பி.இதயத்பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா. பொன்னம்மாள், பா. கமலக்கண்ணன், வட்டக் கழக செய லாளர்கள் மு. மோகன், க.சிட்டி பாபு, ச. டேவிட் இன்பராஜ், த. குணசேகர், கே.எஸ். தினேஷ்பிரபு, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பார்த்திபன், த. ஐசென்ட், க.அப்துல்கபீர், அ. குப்பன், எம். டி. ஆர். புகழ், ஆர். சீனிவாசன், பா. சுரேஷ், கோ.தட்சிணாமூர்த்தி, என்.இ. சரவணன், வி.என்.பாபு 112 வது வட்டக் கழக நிர்வாகிகள்: எஸ்.மனோகரன், வி.பொன்சீலன், எஸ்.பொற்கொடி, வீ.ராஜி, எச்.சக்கரவர்த்தி, எல். முருகன், பி.சிவா, பி. பாலாஜி, என்.ஜான்

நன்றி உரை வட்ட துணை செயலாளர் ஜெனரேட்டர் ராஜ் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், முகவர்கள், பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

கூட்டம் ஏற்பாடு 112 வது வட்டக் கிளைக் கழகப் பிரச்சார பாடகர் ஆசிப் இறையன்பு இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

### வி.சிவ பிரகாஷ் ஏற்பாட்டில் - இ.கண்ணப்பன் தலைமையில்

# மாதவரம் 16வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் புழல் எம்.நாராயணன் வழங்கினார்!

மாதவரம், ஜூன் 22-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, மற்றும் 16 வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வார்டு வாரியாக சிறப்பான முறையில் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா தொடர் நிகழ்ச்சிகளாக நடைபெற்று வருகின்றன.

மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டம் எலந்தனூர் துவாரகா நகர் பேஸ் 1 பகுதியில் அமைந்துள்ள, அரசு உயர்நிலைப் பள்ளியில் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இளைஞர் அணி செயல் வீரர் எலந்தனூர் வி.சிவப்பிரகாஷ் ஏற்பாட்டில் நோட்புக், பென்சில், பேனா, ஜாமென்ட்ரி பாக்ஸ், ஆகியவற்றுடன் இனிப்பு லட்டு வழங்கும் விழா பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்ட மேடையில் நடைபெற்றது.

16வது வட்ட செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் நா.மோகன் குமார் நாகூரார்,மாவட்ட பிரதிநிதிகள், பா.சந்திரன், பி.தரணி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கருணாகரன், வட்ட நிர்வாகிகள் இ. அருள், இ.வெங்கடே சன், என்.பரசுராமன், ஆர்.குமரவேல், உனக்கு கே.ஏ. ரமேஷ், சி.முத்தையா, புவனேஸ்வரி மகேஷ் குமார், வி.மாரி, கிருபாகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், குளக்கரை மஞ்சுநாதன், கடப்பாக்கம் எம்.மகேஷ் குமார், கடப்பாக்கம் சாம் ராஜ், பர்மா நகர் முருகன், வக்கீல் சுரேந்தர், சடையங்குப்பம் சுரேந்திரன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செம்மீன் எடிசன், வக்கீல் கண்ணன், சிளம் ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ் செய்திருந்தார்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 16வது வட்டம் எலந்தனூர் துவாரகா நகர் பேஸ் ஒன் பகுதியில் அமைந்துள்ள, அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு, இளைஞர் அணியை சார்ந்த எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ் ஏற்பாட்டில், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார், இந்த நிகழ்ச்சியில் கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் நா. மோகன் குமார் நாகூரார், பா .சந்திரன், பி. தரணி, இ .அருள், இ.வெங்கடேசன், என். பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், ஆர். குமரவேல், கே.ஏ. ரமேஷ், சி .முத்தையா, வி மாரி, தமிழரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.